BECOMING 我画故我在
LIM TZE PENG

NATIONAL GALLERY SINGAPORE

## லிம் .ஸ்ஸ பெங்காக மாறுதல்

லிம் ஸ்ஸ பெங் (பிறப்பு 1921, சிங்கப்பூர்) சிங்கப்பூரின் கலை வரலாற்றில், தனித்துவமான இடத்தைப் பிடித்திருக்கிறார். அவர் மையெழத்தோவிய, நேர்த்திக் கையெழுத்து வகைகளில் தம் தொடர்ச்சியான கண்டுபிடிப்புகளுக்காக அறியப்படுகிறார். மேலும், பல்வேறு மரபுகளுடன் ஈடுபடுவதால், அதில் பண்டைய நடைமுறைகளில், சமகாலப் பொருத்தத்தை புகுத்துவதற்கான அவரின் திறனுக்காக அறியப்படுகிறார். அவர் கலைப்படைப்புகள் தேசப் பேரார்வங்கள், போராட்டங்கள் ஆகியன வெற்றிகளின் பிரதிபலிப்பாகும். வைய சிங்கப்பூர் அடையாளத்தின் சாரத்தைப் பார்வையாளர்களுடன், கலைக் கண்ணாடி மூலம் இணைக்க அனுமதிக்கிறது.

*லிம் ஸ்ஸ பெங்காக மாறுதல்*, இந்த நூற்றாண்டுக் கலைஞரின் சிக்கலான கலைப் பரிணாமத்தையும் கதையையும் பல்வேறு வழிகளில், அவரின் நிலப்பரப்புகள், மனக்காட்சிகள், "இதயக்காட்சிகள்" ஆகியவற்றை ஆராய்கிறது. இந்தப் பயணம், சிங்கப்பூர் அமைப்புகளில் ஆழமாக வேரூன்றிய, உலகளாவிய கலை இயக்கங்களால் தாக்கத்தை ஏற்படுத்திய வளர்ச்சியின், அழுத்தமான கதையாக விரிகிறது.

கண்காட்சி மூன்று பிரிவுகளாக ஒழுங்கமைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொன்றும் கலைஞரின் சிக்கலான படைப்புக் கதைக்குச் சாளரமாகச் செயல்படுகிறது. மேலும் அவரை மனிதனாகவும் கலைஞனாகவும் ஆழமாக வடிவமைத்த உடல் மனோதத்துவ புவியியல் பிரதிபலிக்கிறது.

### Dàpō இலிருந்து Xiǎopō வரை

எதேச்சையாக மொழிபெயர்க்கப்பட்ட, Dàpō, Xiǎopō என்றால், முறையே "பெரிய கப்பல்துறை, "சிறிய கப்பல்துறை" எனப் பொருள்படும். இன்றைய ஊட்ரம் பூங்காவிலிருந்து, கம்போங் கிளாம் வரை நீண்டிருக்கும் சிங்கப்பூர் ஆற்றின் இருபுறப் பகுதிகளைக் குறிக்க, பழைமையான சீனர் சமூகங்கள் பயன்படுத்தும் பேச்சு வழக்கு அவை.

நீர்வண்ண ஓவியம்,, எண்ணெய் வண்ண ஓவியம், மை ஆகியவற்றின் மூலம், சுற்றுச்சூழலின் கலாசார செழுமையைப் படமாகப் பதிய வேண்டும் என்ற நம்பிக்கையில், லிம் ஸ்ஸ பெங், தம் கலைஞர்-நண்பர்களுடன் வெளிப்புற ஓவிய அமர்வுகளை நடத்த, அடிக்கடி இந்தப் பகுதிக்கு வந்தார். பழங்காலச் சிங்கப்பூரின் அவர் ஓவியங்கள், கடந்த காலப் பார்வை, நெரிசல்மிக்க ஈரச் சந்தைகள், குளம்பியகங்கள் பண்டிகைக் கொண்டாட்டங்கள், சுல்தான் மசூதி போன்ற உள்ளூர் அடையாளங்களின் சித்தரிப்புகளும் சிங்கப்பூர் நதியின் பரந்த காட்சிகளால் நம்மை வழிநடத்துகின்றன.

**உலக வெளிப்புறம்**

1960கள் முதல் 2000கள் வரை, தென்கிழக்காசியா,ஐரோப்பாவில் அவர் கலைக்குழுச் செயல்பாடுகள், பயணம் தொடர்பான லிம் ஸ்ஸ பெங்கின் படைப்புப் பயணத்தைத் தொடர்ந்து ஆராய்ந்து வருகிறோம். இந்தப் பயணங்கள், சின் மின் பள்ளியின் (1950-1981) முதல்வராகப் பணிபுரிந்த அவர், பணி ஓய்வு பெறுவதற்காகவும், புதிய ஓவிய வடிவங்களை ஆராய்வதற்கும், கலாசாரப் பரிமாற்றம் மூலம் அவரின் கலைப் பயிற்சியை மேம்படுத்துவதற்கும், விலைமதிப்பற்ற நேரத்தை அவருக்கு வழங்கிற்று.

லிம் ஸ்ஸ பெங், பத்து ஆண்கள் கலைக் குழுவுடன் மேற்கொண்ட ஆரம்பப் பயணங்கள்பலனளிப்பதாகவும், நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தியதாகவும், அவர் ஒப்புக்கொள்கிறார். ஒவ்வொரு பயணமும், கலாசார மூழ்கு நிகழ்ச்சி போல, கலைஞர்கள் வெளிப்புற ஓவியங்களில் ஈடுபட்டு, பல்வேறு இனக்குழுக்களைச் சேர்ந்த கிராம மக்களுடன் உரையாடி, உள்ளூர் கலைச் சமூகங்களுடன் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டு, அவர்களின் சுற்றுப்புறங்களில் காணப்படும் ஆக்கப்பூர்வமான உத்வேகங்களை உள்வாங்கிக் கொள்வது போல இருந்தது.

**என் சொந்த மைதானத்தில்**

இந்த மூன்றாம் பகுதி, லிம் ஸ்ஸ பெங்கின் கலை வெளிப்பாட்டில், சுதந்திரம் அடைவதற்கான உந்துதலை ஆராய்கிறது. அவர் பல்வேறு வகையான கலைகளைப் பற்றி மேலும் கற்றுக்கொண்டதால், கலைஞர்-நண்பர்களுடனான அவர் தொடர்புகள், வெளிநாட்டுக் கலைப் பயணங்களுடனும், பல்வேறு நுட்பங்கள் காட்சி மொழிகளுடனும் பரிசோதனை செய்யத் தொடங்கினார். அது அவர் தம் சொந்தக் கலைத் தொடர்பு மொழியை நிறுவி, சொந்தக் கலைக் கொள்கைகளை வளர்த்துக்கொள்ள வழிவகுத்தது. லிம், அதைப் பற்றி விளக்கி, நல்லதொரு ஓவியத்திற்கு தன் ஆறு கொள்கைகளை எழுதினார். அது அழகியல், உள்ளூர்ப் பகுதி, தாள லயம் ஆகியவற்றுடன், வாழ்க்கையைப் புரிந்துகொண்டு பார்ப்பது ஆகியவற்றை வலியுறுத்துகிறது.

கையெழுத்து, கல்வெட்டு, மை ஓவியம், எண்ணெய் வண்ண ஓவியம், கவிதை உட்பட பல கலை வடிவங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட அழகியல் குணங்களை ஒருங்கிணைத்து, வெளிப்படுத்தும் படைப்புகளை உருவாக்க, பிரதிநிதித்துவ ஓவியங்கள், கையெழுத்து ஆகியவற்றிலிருந்து அவர் மாறினார். அவையனைத்தும், லிம் தம் தனித்துவ, மை-கலை பாணியைக் கண்டுபிடித்ததில் உச்சத்தை அடைந்தது.

**எபிலோக்**

எந்தவொரு படிநிலையையும் திணிக்காமல், அனைத்து பாணி, வடிவம், பொருட்கள் உட்கருத்துகளைச் சமமாக நடத்துவதன் மூலம் லிம் ஸ்ஸ பெங், தமது படைப்புக் கொள்கைகளையும் பாணியையும் பெற்றார். ஒவ்வொரு கலைப் படைப்புப் பரிசோதனை, அவரை இறுதி நோக்கத்திற்கு நெருக்கமாகக் கொண்டுவந்தது: அது, அவரின் தனித்துவ அழகுணர்வைக் கண்டறிவது.

*லிம் ஸ்ஸ பெங், ஆக மாறுதல்*, லிமின் கலைப் பரிணாமம், ஒற்றை, நேரிடிப் பாதையைப் பயன்படுத்தவில்லை என்பதை நிரூபிக்கிறது. மாறாக, அவர் பயணம், பல திருப்பங்கள், முட்டுக்கட்டைகள் மாற்றுப்பாதைகளால் ஆனதாகத் தெரிகிறது. இது, ஆற்றல்மிக்க, பன்முகப் படைப்புப் பாதையை பிரதிபலிக்கிறது. அது அவரின் தனிப்பட்ட வாழ்க்கையை அவருடைய கலைப்பணியுடன் இணைக்கிறது.

**காப்பகக் காட்சிப் பெட்டி 1**

லிம் தம் சகாக்களுடன் வெளிப்புற ஓவிய அமர்வுகளை நடத்துவதற்காக சிங்கப்பூர் ஆற்றைச் சுற்றியுள்ள Dàpo , Xiaopo பகுதிகளுக்கு அடிக்கடி சென்றார். அந்தப் பகுதியில் ஆரம்பக்கால பொதுக் கலைக் கண்காட்சிகள் சிலவற்றையும் அவர் கூட்டாக ஏற்பாடு செய்தார். அந்தப் பகுதியில், உள்ளூர் கலைத் துறையில் லிம்மின் தாக்கத்தையும், சிங்கப்பூரில் அவரின் அன்றாட வாழ்க்கையின் மைக் கதையையும், விரும்பத்தக்க ஆரம்ப தொடக்கங்களையும் காணலாம்.

வேறுவிதமாகக் கூறப்படாவிட்டால், அனைத்து காப்பகப் பொருட்களும் கலைஞரின் சேகரிப்பிலிருந்து வந்தவை.

**காப்பகக் காட்சிப்பெட்டி 2**

லிம், பத்து ஆண்கள் கொண்ட கலைக்குழுவின் நிறுவன உறுப்பினராக இருந்தார். ச்சென் ச்செங் மேய், ச்சூ கெங் குவாங், யே ச்சி வெய் ஆகியோருடன் சேர்ந்து, அவர் 1960லிருந்து, 1970 வரை மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து கம்போடியா ஆகிய நாடுகளில் ஐந்து கலைப் பயணங்களைத் தொடங்கினார். அந்தப் பயணங்கள் கலைஞர்களை வெளிப்புறங்களில் ஓவியம் வரையவும், உள்ளூர் கிராம மக்களுடன் கலந்துறவாடவும், ஒத்துழைக்கவும் அனுமதித்தன. அனைத்துலகக் கலைச் சமூகங்கள், அவர்களின் துடிப்பான சூழலிலிருந்து படைப்பு உத்வேகம் பெற, அப்பயணங்களுக்கு அப்பால், பல்வேறு உள்ளூர் கலைக்குழுக்கள், சங்கங்களுடன் அனைத்துலகக் கலைப் பயணங்களில் லிம் தொடர்ந்து பங்கேற்று, மது படைப்புகளின் எல்லைகளை மேலும் விரிவுபடுத்தினார்.
அனைத்து காப்பகப் பொருட்களும் கலைஞரின் சேகரிப்பிலிருந்து வந்தவையே.

**காப்பகக் காட்சிப் பெட்டி 3**

லிம்மின் தனிப்பட்ட நூலகம், ஆவணக் காப்பகம் அவரின் பல்வேறு அகத்தூண்டுதல்கள், படைப்புச் செயல்முறைகள் பற்றி அறிவார்ந்த, ஆழமிகு உட்கருத்தை வெளிப்டுத்துகின்றன. அவரின் உணர்ச்சியை, உண்மையாக வனப்புமிகு சூத்திரத்தின் தேடல் வெளிப்படுத்தப்பட்டது. அவரின் பெருமைமிகு தருணங்கள், பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

அரிய கையெழுத்துக் குறிப்புகள், வார்த்தைகளால் வருணிக்கமுடியாத அவரின் சுய உணர்வுகளை வெளிப்படுத்தும் வழிமுறையாக, கையெழுத்து ஓவியம் முதலியவற்றைப் பயன்படுத்துவதில் லிம்மின் நம்பிக்கையை எடுத்து இயம்புகிறது. அவரின் அணுகுமுறை, படிநிலை வேறுபாடின்றி, பாணியையும் ஊடகங்களின் சூசகப் பயன்பாட்டையும் பிரதிபலிக்கிறது. லிம்மைப் பொறுத்தவரை, கைரேகை, கல்வெட்டு, மை ஓவியம், எண்ணெய் வண்ண ஓவியம், கவிதை ஆகியவை ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருப்பதால், அவரின் கலை ததும்பிய பார்வையின் காட்சி, உணர்ச்சிமிகு அதிர்வுகளை ஆராய்ந்து எய்தும் வழிகளை வழங்குகிறது.

சுருங்கச் சொல்லின், எல்லாக் காப்பக அரும் பொருட்களும் கலைஞரின் சேகரிப்பிலிருந்து வந்தவை.